**அக்டோபர் – 29**

# TNPSC துளிகள்

- இந்தியக் கடலோரக் காவல்படையானது (ICG), கடலோர ரோந்து, மீன்வளப் பாதுகாப்பு, கடத்தல் எதிர்ப்பு, கடற்கொள்ளை எதிர்ப்பு மற்றும் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, ICG கப்பல் அஜித் மற்றும் ICG கப்பல் அபராஜித் ஆகிய இரண்டு விரைவு ரோந்து கப்பல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கேரள மாநில அரசானது, அரபிக் கடலுக்கு அடியில் வைப்பின் மற்றும் கொச்சி துறைமுகத்தினை இணைக்கும் 2.75 கி.மீ தூர கடலடிச் சுரங்கப்பாதையை அமைக்க உள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வரலாற்றாசிரியரும் யேல் பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுனில் அம்ரித், The Burning Earth: An Environmental History of the Last 500 Years என்ற புத்தகத்திற்காக 2025 ஆம் ஆண்டின் பிரிட்டிஷ் அகாடமி புத்தகப் பரிசை வென்றுள்ளார்.
- இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற நீரஜ் சோப்ராவுக்கு பிராந்திய ராணுவத்தில் லெப்டினன்ட் கர்னல் என்ற கௌரவ பதவி வழங்கப்பட்டுள்ளது.
- கங்கை நதியில் 57–70 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள பஜ்ரங் சேது எனும் இந்தியாவின் முதல் 132 மீட்டர் தூர கண்ணாடி தொங்கு பாலமானது விரைவில் திறக்கப் பட உள்ளது.
- 1962 ஆம் ஆண்டில் இந்திய திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP) நிறுவப்பட்டதை நினைவு கூரும் விதமாகவும், இந்தியாவின் வடக்கு எல்லைகளைப் பாதுகாப்பதில் அதன் சேவையை கௌரவிக்கும் விதமாகவும், இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படை உருவாக்க தினமானது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- பஹ்ரைனின் மனாமாவில் நடைபெற்ற 3வது ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் (2025) இந்திய ஆடவர் கபடி அணி தங்கப் பதக்கத்தை வென்றது.
    - சென்னையைச் சேர்ந்த R. கார்த்திகா துணை அணித் தலைவராக செயலாற்றிய 18 வயதிற்குட்பட்ட மகளிர் அணி, ஈரான் அணியை வீழ்த்தி மகளிர் கபடி அணிக்கான தங்கப் பதக்கத்தை வென்றது.
- சர்வதேச உறவுகளில் ஈடுபட்டுள்ள உலகெங்கிலும் உள்ள அர்ப்பணிப்பு மிக்க தூதர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதியன்று சர்வதேச தூதர்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- உலகளாவிய மேம்பாடு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தின் பங்கை எடுத்துக்காட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதியன்று உலக மேம்பாட்டு தகவல் தினம் அனுசரிக்கப் படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: "Harnessing Knowledge Sharing for Global Development" என்பதாகும்.
- நமது கலாச்சார மற்றும் கூட்டு நினைவகத்தின் முக்கியப் பகுதியாக ஒலி-ஒளி ஆவணங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 27 ஆம் தேதியன்று உலக ஒலி-ஒளி பாரம்பரிய தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "A Window to the World" என்பது ஆகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ் திறமைகள் திட்டம்




- வெளிநாட்டுத் தமிழ் ஆராய்ச்சியாளர்களை ஈர்ப்பதற்காக தமிழ்நாடு மாநில அரசானது, 'தமிழ் திறமைகள் திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, போட்டித்தன்மை வாய்ந்த சம்பளம், புத்தொழில் நிறுவன ஆராய்ச்சி மானியங்கள், இடமாற்ற ஆதரவு மற்றும் விரைவான நுழைவு இசைவுச் சீட்டு வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாநில உயர் கல்விச் சபையானது (TANSCHE) பல துறைகளில் வெளிநாட்டுத் தமிழ் ஆராய்ச்சியாளர்களின் பதிவேட்டை பராமரிக்கும்.
- இந்தத் திட்டமானது அமெரிக்கா, ஐக்கியப் பேரரசு, ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களை நீண்ட கால மற்றும் குறுகிய கால ஒத்துழைப்பினை இலக்காகக் கொண்டுள்ளது.
- சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அடிப்படை அறிவியல் மற்றும் கணிதத்திற்கான புதிய ஆராய்ச்சி மையங்களை நிறுவ அரசு 100 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.


## இரிடியம் மோசடி

- தமிழ்நாட்டின் குற்றப்பிரிவு - குற்றவியல் புலனாய்வுத் துறை (CB-CID), இரிடியம் பெயரிலான மோசடி தொடர்பாக 57 பேரைக் கைது செய்துள்ளது.
- இரிடியம் என்பது 77 அணு எண் கொண்ட தனிமம் ஆகும்.
- இது மிகவும் அடர்த்தியானது மற்றும் அரிமானத்தினை எதிர்க்கும் தன்மை கொண்டது என்று அறியப்படுகின்ற பிளாட்டினம் குழுவில் உள்ள ஒரு கடினமான, உடையக் கூடிய, வெள்ளி-வெள்ளை தாண்டல்/நிலைமாற்ற உலோகமாகும்.
- இது மிக முக்கியமான தனிமங்களில் ஒன்றான பிளாட்டினம் கொண்ட தனிமங்களின் குடும்பத்தைச் சேர்ந்தது.
- இது 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேய வேதியியலாளர் ஸ்மித்சன் டென்னன்ட் என்பவரால் பிளாட்டினம் தாதுக்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- இது தாண்டல்/நிலைமாற்ற உலோகக் குழுவில் வருகிறது.
- இரிடியத்திற்கான பயன்பாடுகளில் ஊற்று எழுதுகோல் முனைகள் (ஆஸ்மியத்துடன் கலக்கப் பட்டவை), திசைகாட்டி தாங்கு உருளைகள், உயர்-வெப்பநிலைக் குடுவைப் பொருட்கள் மற்றும் கனரக மின் தொடர்பு அமைப்புகள் ஆகியவை அடங்கும்.




# தேசியச் செய்திகள்

## இயங்கலை வழி தேசிய மருந்து உரிம வழங்கீட்டு அமைப்பு





- மத்திய மருந்து தரநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது, இயங்கலை வழி தேசிய மருந்து உரிம வழங்கீட்டு அமைப்புத் (ONDLS) தளத்தில் ஒரு டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த அமைப்பு ஆனது அதிக ஆபத்துள்ள மருந்து கரைசல்களின் விநியோகச் சங்கிலி மற்றும் தரத்தைக் கண்காணிக்கிறது.
- மத்தியப் பிரதேசத்தில் 20க்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புகளுக்கு காரணமான டைஎத்திலீன் கிளைக்கால் (DEG) கொண்ட கலப்படமான இருமல் நிவாரணிகள் பற்றிய அறிக்கைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டு உள்ளது.
- அதிக ஆபத்துள்ள கரைசல்களில் கிளிசரின், புரோப்பிலீன் கிளைக்கால், மால்டிடோல், சர்பிடால், பாலிஎத்திலீன் கிளைக்கால், பாலிசார்பேட்டுகள் மற்றும் சில ஆல்கஹால்கள் அடங்கும்.

- கரைசல் உற்பத்தியாளர்கள் ONDLS அமைப்பில் பதிவு செய்து, உற்பத்தித் தொகுதி சார்ந்தத் தரவைப் பதிவேற்ற வேண்டும் என்பதோடு, மேலும் சந்தை வெளியீட்டிற்கு முன் உரிமங்களைப் பெற வேண்டும்.
- முறையான உற்பத்தி நடைமுறை (GMP) மற்றும் உலக சுகாதார அமைப்பு-GMP (WHO-GMP) போன்ற சான்றிதழ்கள் உட்பட உற்பத்தி மற்றும் விற்பனை உரிமங்களை செயலாக்குவதையும் இந்தத் தளம் ஆதரிக்கிறது.

## SOAR திட்டம்

- 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களை டிஜிட்டல் சார்ந்த எதிர்காலத்திற்கு ஏற்ப இந்தியாவை தயார் படுத்தும் நோக்கில் செயற்கை நுண்ணறிவு தயார்நிலைக்கான திறன் கட்டமைப்புத் (SOAR) திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- நெறிமுறை சார்ந்த AI பயன்பாடு மற்றும் அடிப்படை இயந்திரக் கற்றல் கருத்துகளில் கவனம் செலுத்தும் மாணாக்கர் மற்றும் கல்வியாளர்களுக்கான மாதிரிகளை SOAR வழங்குகிறது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் கல்விக்கான சிறப்பு செயற்கை நுண்ணறிவு மையத்தினை நிறுவ 500 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது.
- SOAR ஆனது டிஜிட்டல் திறன்கள், AI சார்ந்த கல்வியறிவு மற்றும் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக திறன் இந்தியா திட்டம் மற்றும் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) 4.0 ஆகியவற்றுடன் இணைக்கப்படுகிறது.





## ஊடுருவல் கண்டறிதல் அமைப்பு

- வடகிழக்குப் பிராந்திய இரயில்வே (NFR) நிர்வாகமானது, இரயில் தண்டவாளங்களுக்கு அருகில் வரும் யானைகளைப் பாதுகாக்க ஊடுருவல் கண்டறிதல் அமைப்பை (IDS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- யானைகளின் நடமாட்டத்தைக் கண்டறிய ஒளியிழை உணர்வுக் கருவிகளைப் பயன்படுத்துகின்ற இந்த அமைப்பு ஆனது இரயில் ஓட்டுநர்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளுக்கு நிகழ்நேர எச்சரிக்கைகளை அனுப்புகிறது.
- இந்த சோதனை நிறுவல்களில் நான்கு இரயில்வே பிரிவுகளில் 64.03 கி.மீ. நீள யானை வழித்தடங்களும் 141 கி.மீ நீள தொகுதிப் பிரிவுகளும் அடங்கும்.
- அடுத்த கட்டமாக IDS ஆனது 146.4 கிமீ யானை வழித்தடங்களுக்கு விரிவுபடுத்தப்படும், மேலும் இது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் முழுமையாகச் செயல்படுத்தப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## இந்தியாவின் காற்று மாசு நெருக்கடி





- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் சுமார் 2 மில்லியன் உயிரிழப்புகள் காற்று மாசுபாடு காரணமாக ஏற்பட்டுள்ளன.
- இந்த உயிரிழப்புகளில் சுமார் 90% இதய நோய், நுரையீரல் புற்றுநோய், நீரிழிவு மற்றும் மறதி நோய் (டிமென்ஷியா) போன்ற தொற்றாத நோய்களால் ஏற்பட்டவையாகும்.
- இந்தியாவில் 100,000 பேருக்கு தோராயமாக சுமார் 186 காற்று மாசுபாடு தொடர்பான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் உயிரிழப்புகளில் சுமார் 70% காற்று மாசுபாட்டால் ஏற்படுகிறது.

- இது நுரையீரல் புற்றுநோய் உயிரிழப்புகளில் தோராயமாக 33%, இதய நோய் உயிரிழப்புகளில் 25% மற்றும் நீரிழிவு தொடர்பான உயிரிழப்புகளில் 20% என்று பங்களிக்கிறது.
- இந்தியாவில் PM2.5 அளவுகள் உலக சுகாதார அமைப்பின் வருடாந்திர உமிழ்வு வழி காட்டுதலை விட எட்டு மடங்கும் மற்றும் 24 மணி நேர வழி காட்டுதலை விட நான்கு மடங்கு அதிகமாகவும் உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## கடன் குறித்த புதிய செவில்லா மன்றம்




- கடன் குறித்த புதிய செவில்லா மன்றம் என்பது ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN DESA) ஆகியவற்றால் ஆதரிக்கப்படும் ஒரு ஸ்பெயின் தலைமையிலான பலதரப்புத் தளமாகும்.
- இது ஜெனீவாவில் நடைபெற்ற 16வது UNCTAD மாநாட்டில் செவில்லா செயல்பாட்டுத் தளத்தின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டது.
- இந்த மன்றம் இறையாண்மை கடன் நெருக்கடிகளுக்கு நியாயமான, வெளிப்படையான மற்றும் நிலையான தீர்வுகளை ஊக்குவிக்கிறது.
- பொறுப்பான கடன் வாங்குதல் மற்றும் கடன் வழங்கும் நடைமுறைகளை வலுப் படுத்த அரசாங்கங்கள், கடன் வழங்குநர்கள், உரிமையியல் சமூகம் மற்றும் நிபுணர்களை இது உள்ளடக்கியது.
- இந்த மன்றமானது கணிக்கக் கூடிய கடன் மேலாண்மைக்குத் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது மற்றும் செவில்லாவில் ஒப்புக் கொள்ளப் பட்ட கடன் சார் முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதை கண்காணிக்கிறது.
- இது வடக்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் நியாயமான கடன் நிர்வாகத்திற்கான முறையான சீர் திருத்தங்களை மேம்படுத்துகிறது.

## குனார் நதியில் அணைகள்

- ஆப்கானிஸ்தானின் தாலிபான் தலைமையிலான நிர்வாகம் ஆனது குனார் நதியில் அணைகள் கட்டும் திட்டங்களை அறிவித்துள்ளது.
- குனார் நதியானது பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பாய்கிறது.
- இந்த அணை கட்டுமானத் திட்டம் தாலிபான் தலைமையால் உத்தரவிடப் பட்டது.
- இந்த அணைகள் பாகிஸ்தானுக்குள் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## முழு விலையை வெளிப்படுத்தா விளம்பரம்

- நுகர்வோர் விவகாரத் துறையானது, இயங்கலை வழி விற்பனையாளர்களை இணைய வணிக தளங்களில் 'டார்க் பேட்டர்ன் ட்ரிப் ப்ரைசிங்' எனும் நெறிமுறை சாரா விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையை வெளிப்படுத்துதல் குறித்து எச்சரித்துள்ளது.
- சேவை அல்லது வசதிக் கட்டணங்கள் போன்ற மறைமுகக் கட்டணங்கள் பணம் செலுத்துதலில் சேர்க்கப்படும் போது விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையை வெளிப்படுத்துதல் சூழல் ஏற்படுகிறது.
- நுகர்வோர் இது போன்ற நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை 1915 என்ற தேசிய நுகர்வோர் உதவி (NCH) எண்ணை அழைப்பதன் மூலம் தெரிவிக்கலாம்.
- 2025 ஆம் ஆண்டு இயங்கலை வழி தீபாவளி விற்பனையில் சாதனை பதிவானதையும், விரைவான வர்த்தகப் பரிவர்த்தனைகளில் கூர்மையான அதிகரிப்பையும் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- யூனிகாமர்ஸ் நிருவனத்தின் கூற்றுப் படி, பண்டிகை காலத்தில் இந்தியாவின் இயங் கலை வழி சில்லறை ஆர்டர்கள் ஆண்டிற்கு 24% வளர்ச்சியடைந்தன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## AI செயல்பாட்டு வழிகாட்டி மற்றும் வெள்ளை அறிக்கை



- இந்திய அரசாங்கத்தின் முதன்மை அறிவியல் ஆலோசகர் பேராசிரியர் அஜய் குமார் சூட், இந்தியாவிற்கான AI 2030 முன்னெடுப்பின் கீழ் அறிக்கை வெளியீடுகளை வெளியிட்டார்.
- அவற்றுள்,
    - Future Farming in India: AI Playbook for Agriculture,
    - Transforming Small Businesses: An AI Playbook for India’s Small and Medium Enterprises, and
    - Shaping the AI Sandbox Ecosystem for the Intelligent Age: White Paper ஆகியவை அடங்கும்.
- விவசாயிகள் மற்றும் சிறு வணிகங்களுக்கான செயற்கை நுண்ணறிவு தீர்வுகளைப் பயன்படுத்துவதற்கான செயல்பாட்டு உத்திகளை இந்தச் செயல்பாட்டு வழிகாட்டிப் புத்தகங்கள் வழங்குகின்றன.
- IMPACT AI கட்டமைப்பு ஆனது, அரசாங்கக் கொள்கைகளை செயல்படுத்துதல், தொழில் துறைத் தீர்வுகளை உருவாக்குதல் மற்றும் முன்னணி துறைத் தொழிலாளர்கள் கருவிகளை உருவாக்குதல் போன்ற ஒத்துழைப்பை வழிநடத்துகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## முன் எச்சரிக்கைகள் குறித்து WMO அறிக்கை 2025

- உலக வானிலை அமைப்பு ஆனது "the Early Warnings for All initiative" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, 2027 ஆம் ஆண்டிற்குள் பல இடர் முன் எச்சரிக்கை அமைப்புகளுடன் ஒவ்வொரு நபரையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தரவு தரத்தை மேம்படுத்துவதற்காக உலகளாவிய அடிப்படை கண்காணிப்பு வலை அமைப்பின் விரிவாக்கம் மற்றும் தேசிய வலையமைப்புகளின் தானியங்கி மயமாக்கலை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- WMO தகவல் அமைப்பு 2.0-ன் துவக்கம் நிகழ்நேர உலகளாவிய தரவுப் பரிமாற்றத்தைச் செயல்படுத்துவதோடு, வளங்கள் குறைவாக உள்ள வானிலை சேவைகளை கூட இணைக்கிறது.
- புயல்கள், வெள்ளம், வறட்சி மற்றும் தீவிர வெப்பத்திற்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான கணிப்புகள் உட்பட WMO ஒருங்கிணைந்தச் செயலாக்கம் மற்றும் முன்கணிப்பு அமைப்பு மூலம் முன்னறிவிப்புத் திறன்கள் மேம்பட்டுள்ளன.




## மீத்தேன் குறித்த UNEP அறிக்கை 2025

- "An Eye on Methane 2025: From Measurement to Momentum" என்ற ஐந்தாவது IMEO அறிக்கையானது உலகளவில் மீத்தேன் குறைப்பு முயற்சிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது.
- தற்போதையப் புவி வெப்பமடைதலில் மனிதனால் ஏற்படும் மீத்தேன் உமிழ்வுகள் தோராயமாக மூன்றில் ஒரு பங்கிற்கு காரணமாகின்றன.
- சர்வதேச மீத்தேன் உமிழ்வு ஆய்வகம் (IMEO) ஆனது, மீத்தேன் உமிழ்வைக் குறைப்பதற்கான திறந்த மற்றும் செயல்படக் கூடிய தரவை அரசாங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்குகிறது.
- தரவு ஆதாரங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு மீத்தேன் கூட்டாண்மை 2.0 மூலம்


தொழில்துறை அறிக்கையிடல், மீத்தேன் எச்சரிக்கை மற்றும் மறு நடவடிக்கை அமைப்பு வழியாக செயற்கைக்கோள் வழி கண்டறிதல், உலகளாவிய மீத்தேன் ஆய்வுகள் மற்றும் தேசிய உமிழ்வு ஆய்வுகள் ஆகியவை அடங்கும்.

- பருவநிலை மாற்ற மீள் எழுச்சி நிலைகள் மீறுவதைத் தடுக்க, அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களில் மீத்தேன் குறைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்று இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.




## முக்கிய தினங்கள்

### ஐக்கிய நாடுகள் தினம் 2025 - அக்டோபர் 24




- 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டதைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 24 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபை சாசனம் நடைமுறைக்கு வந்த போது ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டானது ஐக்கிய நாடுகள் சபையின் 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகள் மற்றும் சாதனைகள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Building Our Future Together" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★